நகர்மன்றம்
உதகமண்டலம்
**25–01–2021.**

அன்புடையீர்:

வணக்கம். இந்நகராட்சியின் ஜனவரி **2021–ம்** மாத சாதாரண கூட்டம் வருகிற **25.01.2021** அன்று காலை **11.00** மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் குத்தகை இனங்களுக்கு **06.01.2021** அன்று **11.30**(காலை)க்கு நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு ஏலதாரர்கள் மற்றும் ஒப்பந்தபுள்ளி கலந்து கொண்டனர்.

**1. சந்தை நுழைவு வாயில் சுங்கம் வசூலிக்கும் குத்தகை உரிமம்**

**2. கட்டண கழிப்பிடம் (ஹோபார்ட் பார்ச் கிராஸ் சாலை)**

வரிசை எண்.**1** மற்றும் **2** வரை உள்ள குத்தகை இனத்திற்கு ஏலம் கோர யாரும் முன்வரவில்லை.

**3. வாகனம் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமம் (தீயணைப்பு அலுவலக சாலை முதல் YWCA சாலை வரை)**

| ஏலதாரர் பெயர் | | ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|
| I. திரு.என்.தியாகராஜன், க/பெ.நாகராஜ், புது அக்ரஹாரம், உதகை | – | ரூ.3,28,000/– |
| II. திரு.எச்.டி.ரவி பிரகாஷ், 53, Withing Tone House, உதகை | – | ரூ.3,80,000/– |
| III. திரு.எஸ்.பஷீர், த/பெ.சலீம், பிரகாசபுரம், கேத்தி | – | ரூ.3,77,000/– |
| **ஒப்பந்தப்புள்ளி** | | **ஒப்பந்தப்புள்ளி தொகை** |
| IV. திரு.சங்கர், குமரன் நகர், எல்க்ஹில், உதகை. | – | ரூ.3,53,000/– |

மேற்காணும் குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகையாக ரூ.**3,80,000/–**க்கு திரு.எச்.டி.ரவி பிரகாஷ் அவர்கள் கோரியுள்ளார்.

**4. வாகனம் நிறுத்த கட்டணம் வசூலிக்கம் உரிமம் (காந்தல் முக்கோணப்பகுதி)**

| ஏலதாரர் பெயர் | | கேள்வி தொகை |
|---|---|---|
| I. திரு.எச்.டி.ரவி பிரகாஷ், 53, Withing Tone House, உதகை. | – | ரூ.2,75,000/– |
| II. திரு.ஜே.பரத்குமார், கிளன் ராக், உதகை | – | ரூ.2,73,500/– |

ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை.

மேற்காணும் குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகையாக ரூ.**2,75,000/–** திரு.எச்.டி.ரவிபிரகாஷ், **53**, Withing Tone House, உதகை அவர்கள் கோரியுள்ளார்.

**5. காந்தல் முக்கோணப்பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் 10' X 17' = 170 சதுர அடி.**

| ஏலதாரர் பெயர் | | ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|
| 1. M/S.ஸ்டார் காண்ட்ராக்டர்ஸ், புது அக்ரஹாரம், உதகை | – | ரூ.4,600/– |
| 2. திரு.பஷீர், த/பெ.சலீம், கேத்தி | – | ரூ.5,000/– |

ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை.

மேற்காணும் குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி (மாத வாடகை) தொகையாக ரூ.**5,000/–**க்கு திரு.பஷீர், த/பெ.சலீம், கேத்தி அவர்கள் கோரியுள்ளார்.

எனவே வ.எண்.**3**, வாகனம் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமம் (தீயணைப்பு அலுவலக சாலை முதல் YWCA சாலை வரை) அதிகபட்ச ஏலக் தொகை ரூ.**3,80,000/–**க்கு ஏலம் கோரிய திரு.எச்.டி.ரவி பிரகாஷ், **53**, Withing Tone House, உதகை குத்தகைதாரர் மற்றும் வ.எண்.**4**, வாகனம் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம் (காந்தல் முக்கோணம் பகுதி) அதிக பட்சம் ஏலத்

தொகை ரூ.2,75,000/–க்கு ஏலம் கோரிய திரு.எச்.டி.ரவி பிரகாஷ், Withing Tone House, உதகை குத்தகை தாரர்களுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கிடவும், வரிசை எண்.5ல் காந்தல் முக்கோணம் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்திற்கு (10'X17'=170 சதுர அடி கொண்ட கட்டிடம்) அதிகபட்சம் ஏலத் தொகை ரூ.5,000/–க்கு (மாத வாடகை) கோரிய திரு.எஸ்.பஷீர், த/பெ.சலீம், கேத்தி குத்தகைதாரருக்கு கடை குத்தகை அனுபவிக்கும் உரிமம் வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

**அதிக பட்சம் ஏலம் கோரிய வரிசை எண்.3 மற்றும் 4ற்கு குத்தகை இனத்திற்கு, குத்தகை தொகைக்கு, குத்தகை விதிகளின் படி ஒப்படைக்க அனுமதி வழங்கலாம். வரிசை எண்.5க்கு மாத வாடகை குத்தகை விதிகளின் படி ஒப்படைக்க அனுமதி அளிக்கலாம்.**

**வரிசை எண்.1 மற்றும் 2க்கு மறு ஏலம் கோர அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.அ7/10286/2020)**

**தீர்மான எண்.2443 அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சிக்குட்பட்ட காந்தல் புதுநகர் பகுதியில் தடுப்பு சுவர் கட்ட நுழைவு வரி திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்க கோரி ரூ.23.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பிரேரணை அனுப்பப்பட்டது. மேற்படி தடுப்பு சுவர் கட்டும் பணிக்கு நுழைவு வரி திட்டம் 2019–2020ன் கீழ் மாவட்ட ஆட்சியர், நீலகிரி மாவட்டம் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.D3/7772/2020 நாள். 01.09.2020ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி நிர்வாக அனுமதி நுழைவு வரி திட்டம் நிதியின் கீழ் மதிப்பீடு தொகை ரூ.23.00 இலட்சத்தில் ரூ.15.00 இலட்சத்திற்கு மட்டும் நுழைவரி திட்டம் மீதமுள்ள தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு நகராட்சியின் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கூடுதல் தொகை ரூ.8.00 இலட்சத்தில் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், நிர்வாக அனுமதியை பதிவு செய்யலாம். தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **மாவட்ட ஆட்சியர் அவர்களால் நுழைவு வரி திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தனி அலுவலர் பதிவு செய்யலாம்.**
2. **கூடுதல் தொகை ரூ.8.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.**

   **(ந.க.எண்.இ5/6861/2020)**

   **தீர்மான எண்.2444 அனுமதிக்கப்பட்டது.**

**3.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட எட்டின்ஸ் சாலையில் மூன்று கடைகள் கட்டப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி நகராட்சியின் வருவாயை பெருக்கும் பொருட்டு மேற்குறிப்பிட்டுள்ள கடையின் முதல் தளத்தில் கடைகள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி வருவாய் நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
3. **பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி பணியினை உடன் மேற்கொள்ள வேண்டி தனி அலுவலரின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப் புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**

   **(ந.க.எண்.இ5/0613/2021)**

   **தீர்மான எண்.2445 அனுமதிக்கப்பட்டது.**

**4.** அரசு ஆணை (எம்.எஸ்) எண்.368 நிதி (SFC-MC) துறை நாள்.07.10.2020–ன் படி இந்நகராட்சியில் சிறப்பு திட்டம் 2020–2021ன் கீழ் பணிகளை மேற்கொள்ள கீழ்கண்ட பணிகளை தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | பார்சன்ஸ் வேலி II MGD திட்டத்தின் தலைமை நீரேற்று நிலையத்தில் 250 குதிரை திறன் கொண்ட 6341LPM x 120 மீ Head Duty Condition டர்பைன் பம்பு செட் மாற்றும் பணி மற்றும் 1 MGD திட்டத்தில் புதிய 60HP மோட்டார் பம்ப் செட் சப்ளை செய்து பொருத்தும் பணி | 30.00 |
| 2. | நகராட்சி தினசரி மார்கெட் வளாகத்தின் தென் பகுதி நுழைவு உட்புறம் எரிந்து போன கடைகளுக்கு பதிலாக புதிய கடைகள் கட்டும் பணி<br>(பிளாக் எண்.1,2 மற்றும் 8 – 42 கடைகள்) தென் பகுதி நுழைவு | 24.95 |
| 3 | நகராட்சி தினசரி மார்கெட் வளாகத்தின் உட்புறம் எரிந்து போன கடைகளுக்கு பதிலாக புதிய கடைகள் கட்டும் பணி<br>(பிளாக் எண்.3 மற்றும் 7ல் – 39 கடைகள்) | 24.90 |
| 4 | தீட்டுக்கல் உரக்கிடங்கு பகுதியில் விவசாய நிலத்திலிருந்து வடக்கு பகுதியில் வனநிலம் எல்லை பகுதியினையொட்டி 0மீ முதல் 855 மீ பார்சன்ஸ் வேலி பிரதான சாலை முதல் வனநிலம் எல்லை பகுதி வரை சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 150.00 |

மேற்படி பணிகளை சிறப்பு திட்ட நிதி 2020–2021ன் கீழ் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்க கோரி மாநில உயர்மட்ட குழுவில் பொருள் வைக்க பிரேரணையினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மூலமாக தலைமை செயலாளர், தலைவர் மாநில உயர்மட்ட குழு தலைமை செயலகம், சென்னை அவர்களுக்கு மாவட்ட அட்சித் தலைவர் அவர்களால் பரிந்துரை செய்து முழு மானியமாக நிதி ஒதுக்கீட்டினை பெற்று திட்ட பணிகளை மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. **தனி அலுவலர்அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/0613/2021)**
   **தீர்மான எண்.2446 அனுமதிக்கப்பட்டது.**

**5.** இந்நகராட்சியில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளையும் துரிதமாகவும் மற்றும் சிறப்பான முறையில் செயல்படுத்தும் வகையில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் குறைகளை இந்நகராட்சிக்கு என தனிப்பட்ட முறையில் செயலாக்கி (App Creation) வடிவமைக்கப்பட்டு அதில் பொதுமக்கிளின் குறைககை பதிவு செய்து கொள்ளும் வகையில் செயலாக்கி (App Creation) வடிவமைக்க உள்ளதால் செயலாக்கி (App Creation) செய்யும் அனுபவம் பெற்றுள்ள மென்பொருள் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், App Creation வடிவமைக்க ஆகும் செலவினத்திற்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறிது.

**அலுவலக குறிப்பு:**

**செயலாக்கி (App Creation) மென்பொருள் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், App Creation வடிவமைக்க ஆகும் செலவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்படுகிறது.**

**தீர்மான எண்.2447 அனுமதிக்கப்பட்டது.**

**6.** இந்நகராட்சிக்கு இணைய சேவை தற்போது BSNL நிறுவனத்தில் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி இணைய சேவையின் வேகம் மிகவும் குறைவாக உள்ளதால் மென்பொருள் (Software) பணிகளை மேற்கொள்ள மிகவும் காலதாமதம் ஏற்படும் காரணத்தினால் பொதுமக்களுக்கும் மற்றும் அரசு கோரப்படும் பணிகளை உரிய நேரத்தில் செய்து முடிக்க இயலாத நிலை ஏற்படுகிறது.

எனவே இணையதள சேவை வழங்க பார்வையில் காணும் திருவாளர் Satlinks Get Linked என்ற நிறுவனம் மேற்படி சேவையினை வழங்க முன்வந்துள்ளது. மேலும் தற்போது BSNL நிறுவனம் வழங்கும் இணைய சேவை வேகத்தினை காட்டிலும் அதிவேகமாக இணைய சேவை வழங்குவதாகவும் தற்போது BSNL நிறுவனத்திற்கு வழங்கும் தொகையினை காட்டிலும் குறைவாக உள்ளதால் மேற்படி Satlinks Get Linked நிறுவனத்திற்கு இணையதள சேவையினை வழங்கவும் மென்பொருள் பொருத்தவும் ஓர் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை

ரூ.50,000—த்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

**Satlink Get Linked நிறுவனத்திற்கு இணையதள சேவை வழங்க அனுமதி வழங்கவும் ஆகும் உத்தேச செலவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்படுகிறது.**

**தீர்மான எண்.2448 அனுமதிக்கப்பட்டது.**

7. இந்நகராட்சியின் 2020—2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கு ஒப்பந்ததாரர்களிடம் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி தொகை மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி தொகையினை Filing செய்து படிவம் 16Q வழங்கிய வகையில் தொகை ரூ.1,670/—யை M/S SV Consultant நிறுவனத்திற்கு வழங்க தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :—

1. **தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
2. **தீர்மான எண்.2449 அனுமதிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை மற்றும் பஸ்நிலையத்தில் இயங்கி வரும் அம்மா உணவகங்களில் அரசு மாவு அரைக்கும் இயந்திரம், தானியங்கி குடிநீர் மற்றும் சுடு தண்ணீர் இயந்திரம் மற்றும் மின் சாதனப் பொருட்கள் பழுதடைந்துள்ள தடை உடனடியாக சரி செய்து தர ஆணையாளர் அவர்களின் அறிவுரையின் படி மேற்கண்ட பொருட்கள் பழுது நீக்கும் பணிக்காக உள்ளூர் மார்கெட் விலை விபரத்தின் அடிப்படையில் மதிப்பீட்டு தொகை ரூ.50,000/—க்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :—

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **தீர்மான எண்.2450 அனுமதிக்கப்பட்டது.**

**9.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் முக்கோணம் பகுதியில் உள்ள கழிவு நீரோற்றும் நிலையத்தில் 20 HP submersible motor pump – 1No, 12.50 HP submersible motor pump – 2 Nos, Panel board, Non return valve – 3 Nos பொருத்தப்பட்டுள்ளது. மேலும் 20 HP submersible motor – 1 No மற்றும் 12.50 HP submersible motor pump – 2 Nos (Stand By) motor உள்ளது. காந்தல் புதுநகர், ரெட்கிராஸ் சாலை அண்ணாநகர் பகுதிகளிலிருந்து வரும் கழிவு நீரானது காந்தல் முக்கோணம் பகுதியில் அமைந்துள்ள கழிவு நீரேற்று நிலையத்திலுள்ள சேகரிப்பு தொட்டியில் சேகரிக்கப்பட்டு கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்திற்கு நீரேற்றம் செய்யப்படுகிறது. இந்நகராட்சியில் ஆட்கள் பற்றா குறையாக உள்ள காரணத்தால் கழிவு நீரேற்றும் நிலையத்தில் கழிவுநீர் மின் மோட்டார்களை இயக்கி கழிவு நீரேற்றும் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட கழிவு நீரேற்றும் நிலையத்தில் தினசரி முறையாக மோட்டார்களை இயக்கிவதற்கும் மேலும் panel board, நீர் மூழ்கி மோட்டார் பம்ப்கள் இயக்கி பேனல் போர்டு, NRV பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் சிறு சிறு பழுது நீக்கம் செய்து (Major பழுதுகள் தவிர) முறையாக தினசரி கழிவு நீரேற்றுவதற்காக ஒப்பந்த அடிப்படையில் மின் பணி உதவியாளர் (Electrical Helper) ஒருவரை ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டிற்கு 01.03.2021 முதல் 28.02.2022 வரை மின் உதவியாளர் (Electrical Helper) சப்ளை எசய்து மின் மோட்டார்களை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினம் தொகை ரூ.3,00,000/—க்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :—

1. **அனுமதி வழங்கலாம்.**

2. மேற்படி தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
   தீர்மான எண்.2451 அனுமதிக்கப்பட்டது.

10. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள மார்லிமந்து சாலையில் பாரஸ்கேட் அருகில் உள்ள கன்னிமார சாலை சிமெண்ட் சாலையாக மாற்றி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆனால் இந்த சாலையில் அன்னை வேளாங்கன்னி சர்ச் முதல் கதவு எண்.43/1 வரை எதிர்புறம் உள்ள மண்திட்டுகள் உள்ளதால் இந்த மண்திட்டுகள் மழையினால் சரிந்து புதிதாக அமைக்கப்பட உள்ள சிமெண்ட் சாலையில் விழுந்து வருவதால் மழைக்காலங்களில் மழைநீர் சாலையில் தேங்குவதால் சாலை சேறும் சகதியுமாக மாறிவிடும். மேலும் மழைநீர் சாலையில் தேங்குவதால் சிமெண்ட் சாலை பழுதடையும் என்பதால் மேற்கண்ட இடத்தில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு முன்பு சாலையின் ஒரத்தில் உள்ள மண்திட்டுகள் சாலையில் சரியாத வகையில் மேற்கண்ட இடமான அன்னை வேளாங்கன்னி சர்ச் முதல் கதவு எண்.43/1 வரை தடுப்புச்சுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.95/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.
   தீர்மான எண்.2452 அனுமதிக்கப்பட்டது.

11. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பீட்டன்ஸ் சாலை, வில்லோ பவுண்டு சாலை, மெயின் பஜார் சாலை, ஸ்டீபன் சர்ச் முன்புறம் மற்றும் சர்ச்ஹில் சாலைப் பகுதிகளில் அமைந்துள்ள கழிவுநீர் தொட்டிகள் மற்றும் குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் ஆங்காங்ககே அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலைகளில் வழிந்தோடுகிறது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதோடு பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுனர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகளை உடனே சரி செய்யும்படி அறிவுறுத்தியதன் பேரில் மேற்கண்ட இடங்களில் பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.14.00/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிர் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.இ5/1076/2021)
   தீர்மான எண்.2453 அனுமதிக்கப்பட்டது.

12. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சேரிங்கிராஸ் ஜங்ஷன் முதல் (ஸ்டீபன் சர்ச்) மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நுழைவாயில் வரை அலங்கார மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடங்களில் தெருவிளக்குகள் அமைந்துள்ள நடைபாதையை தற்பொழுது நெடுஞ்சாலைத்துறையினர் உயர்த்தி அமைந்து டைல்ஸ் கற்கள் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதனால் தெருவிளக்குகளிளன் உயரம் 1 1/2 அடி குறைந்துள்ளது. எனவே 63 எண்கள் தெருவிளக்குகளை உயர்த்தி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.இ5/1159/2021)
   தீர்மான எண்.2454 அனுமதிக்கப்பட்டது.

13. இந்நகராட்சிக்குட்பட்ட முள்ளிக்கொரை பகுதியில் உள்ள டாக்டர் அப்துல்கலாம் நகரில் சுமார் 30 குடும்பங்கள் உள்ளன என்றும், இந்த குடும்பங்களுக்கு நகராட்சி குடிநீர் இல்லை என்றும், எங்களுக்கு நகராட்சி குடிநீர் வழங்க வேண்டும் என அப்துல்கலாம் நகர் பொதுமக்கள் மனு அளித்துள்ளனர். அதன்படி மேற்கண்ட இடமானது நேரில் சென்று ஆய்வு செய்ததில் அப்துல்கலாம் நகர் என்ற இடத்தில் 30 குடும்பங்கள் உள்ளன. இந்த குடும்பங்களில் 25 குடும்பங்கள் மட்டும் நகராட்சிக்கு வரி செலுத்தி வருகின்றனர். இந்த குடும்பங்களுக்கு அப்பகுதியில் கிணறோ அல்லது போர் போன்ற குடிநீர் வசதியும் இல்லை. எனவே அப்பகுதியில் உள்ள குடும்பங்களுக்கு டன்மேரி என் இடத்தில் உள்ள Booster (30000 Lakhs) tanksல் இருந்து சுமார் 3.200km தூரத்தில் உள்ள முள்ளிக்கொரை பகுதிக்கு தண்ணீர் 2" GI குழாய் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதே முள்ளிக்கொரை பகுதியில் இருந்து 500 மீ தூரத்தில் உள்ள அப்துல்கலாம் நகர் பகுதிக்கு குடிநீர் வழங்க முள்ளிக்கொரை பகுதியில் இருந்து 2" GI குடிநீர் குழாயில் இருந்து 120 மீ தூரத்திற்கு 2" GI குழாயும் 400 மீ தூரத்திற்கு 1 1/2" GI குழாய் அமைத்தால் தான் அப்துல்கலாம் என்ற நகர் பகுதிக்கு நகராட்சி குடிநீர் வழங்க முடியும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.20/– இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. **கூட்டப்பொருள் அனுமதிக்காக.**
   **தீர்மான எண்.2455 அனுமதிக்கப்பட்டது.**

14. இந்நகராட்சிக்குப்பட்ட சேரிங்கிராஸ் பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலை துறையின் கட்டுப்பாட்டில் உள்ள குன்னூர் செல்லும் சாலையின் கோடப்பமந்து கால்வாயின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தின் இருபுறங்களிலும் பாலத்தை அகலப்படுத்த உள்ளது என தேசிய நெடுஞ்சாலைத்துறை இளநிலைப் பொறியாளர் அவர்களின் கடித எண்.12/தே.நெ/நாள்.05.01.2021ல் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதன்படி பாலத்தின் இருபுறங்களிலும் உள்ள நகராட்சி குடிநீர் குழாய்களை கழற்றி மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும் என உதவி பொறியாளர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதன்படி மேற்கண்ட இடமான பாலத்தின் இருபுறங்களிலும் 6" DI குழாய்களும் 2" GI குழாய்களுக்கும் செல்கின்றனர். இந்த குழாய்களை மாற்றி வேறு இடத்தில் அமைக்க வேண்டும். எனவே மேற்கண்ட 6" மற்றும் 2" GI குழாய்கள் மிகவும் பழமையானதால் இந்த குழாய்களை கழற்றி எடுக்கும் போது பழுதடைந்து உடைந்து விடும். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள குடிநீர் குழாய்களை கழற்றும் போது பழுதடையும் குழாய்களுக்கு புதிய குழாய்களை வாங்கி குழாய்களை மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00/– இலட்சத்திற்கு குடிநீர் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**
2. **தீர்மான எண்.2456 அனுமதிக்கப்பட்டது.**

15. இந்நகராட்சிக்குட்பட்ட எல்க்ஹில் காலனி மற்றும் புதுமந்து பாரஸ்ட்கேட் ஆகிய பகுதியில் உள்ள 2'' GI குழாய் ஆனது சுமார் 26M மற்றும் 28M நீளத்திற்கு உள்ள GI குழாய் ஆனது மழையினால் குளிரினாலும் துருப்பிடித்து மிகவும் பழுதடைந்து உள்ளது. இதனால் இந்த குழாய் வழியாக குடிநீர் விநியோகம் செய்யும் போது தண்ணீரானது வீணாவதுடன் அப்பகுதி மக்களுக்கு குடிப்பதற்கு போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே மேற்கண்ட எல்க்ஹில் காலனியில் உள்ள 2" GI குழாய் மூலம் தண்ணீர் பிடிக்கும் குடும்பங்களுக்கும் அதே போல் புதுமந்து பாரஸ்ட்கேட் பகுதியில் உள்ள 2" GI குழாயில் தண்ணீர் பிடிக்கும் குடும்பங்களுக்கும் தண்ணீர் இல்லாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட எல்க்ஹில் காலனியில் 28 மீ நீளத்திற்கும் மற்றும் புதுமந்து பாரஸ்ட் கேட் பகுதியில் 26 மீ நீளத்திற்கும் பழுதடைந்த 2" GI குழாய்களுக்கு பதிலாக புதியதாக 2"GI குழாய் கொள்முதல் செய்தும் மேற்கண்ட இடங்களில் பதித்தும் பொருத்தியும் பணி செய்து குடிநீர் வழங்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. **மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிடலாம்.**

2. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**
**தீர்மான எண்.2457 அனுமதிக்கப்பட்டது.**

**16.** இந்நகராட்சிக்குட்பட்ட டைகர் ஹில் பகுதியில் அமைக்கப்பட்டு உள்ள மூன்றாவது குடிநீர் திட்டத்தின் மூலம் தரைமட்ட தொட்டி (8.00 லட்சம் கொள்ளளவு)யில் இருந்து 6" ஆதார குழாய் ஆனது குன்னூர் சாலை வழியாக சேரிங்கிராஸ் பகுதிக்கு வரைஅமைக்கப்பட்டு உள்ளது. அந்த 6" DI ஆதாராக் குழாய் மூலம் கீரின்பீல்டு, சேரிங்கிராஸ். உழவர் சந்தை ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த 6" DI குழாய் ஆனது உழவர் சந்தை அருகில் உள்ள கோத்தகிரி செல்லும் சாலையில் மாநில நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பாலத்தின் அருகில் பழுதடைந்துவிட்டது. இதனால் சேரிங்கிராஸ் உழவர் சந்தைப் பகுதி கீரின்பீல்டு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் வழங்க முடியாது நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த 6" DI குடிநீர் குழாய்யை பழுதுகளை சரி செய்து கான்கீரிட் அமைக்க வேண்டும். அப்போது தான் மேற்கண்ட பகுதிகளுக்கு சீரான குடிநீர் வழங்க முடியும். எனவே மேற்கண்ட பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொடிக ரூ.0.92/– இலட்சத்தற்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. **மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிடலாம்.**
2. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**
**தீர்மான எண்.2458 அனுமதிக்கப்பட்டது.**

**17.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 எல்க்ஹில் குமரன் நகர் அரிஜன காலனியில் கதவு எண்.127இ முதல் 266ஏ வரை உள்ள சுமார் 80 மீ நீளத்திற்கு உள்ள பாதாளச் சாக்கடை பைப்லைன் வழியாக செல்லாமல் அருகில் உள்ள வீடுகளுக்கு செல்வதால் வீட்டின் அருகில் தூர்நாற்றம் வீசுவதுடன் வீட்டில் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. மேலும் இந்த கழிவு நீரானது நடைபாதையில் செல்வதால் அருகில் குடியிருப்பவர்களுக்கும் தூர்நாற்றம் வீசுவதுடன் வீட்டில் குடியிருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த கழிவுநீர் பைப்லைன் குழாய்யை மாற்றி அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த கழிவுநீர் பைப்லைன் 80 மீ மற்றும் மேன்ஹோல்கள் புதிதாக அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.10/– இலட்சத்திற்கு நகராட்சி பாதாளச் சாக்கடை நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. **மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகை நகராட்சி பாதாளச் சாக்கடை நிதியில் இருந்து செலவிடலாம்.**
2. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**
**தீர்மான எண்.2459 அனுமதிக்கப்பட்டது.**

**18.** உதகமண்டலம் நகராட்சிக்கு 36 வார்டுகளுக்கும் தினமும் குடிநீர் வழங்க கூடுதலாக குடிநீர் அபிவிருந்த்தி திட்டப் பணிக்காக KFW நிதியின் கீழ் ரூ.2720/– லட்சம் அரசாணை எண். 131/ நதி திடிநீர் வடிககல் நிதி நீர் 2 துறை நாள் 14/7/2010 ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அப்பணிகள் அனைத்தும் முடிவுற்று ஓராண்டு காலம் பராமரிப்பு பணிகளும் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், உதகை அவர்களின் கடித எண். Lr.No.F/WSIS to udhagai Mplty/SDO/RWS/ooty 2019 நாள். 17/2019 ல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சியில் போதிய குடிநீர் சம்மந்தப்பட்ட பணியாளர்கள் யாரும் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கண்ட திட்டத்தை இயக்கப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் பார்சன்ஸ்வேலி தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள மின்மோட்டர்கள் மற்றும் அப்பகுதியில் உள்ள சுத்தகரிப்பு நிலையம் மற்றும் நகர்பகுதியில் 3 இடங்களின் (கீழ் கோடப்பமந்து , கீழ் தொட்டாபெட்டா, டியூடர் ஹால்) புதியதாக தரை மட்ட நீர்தேக்க தொட்டிகள் மற்றும் 5 இடங்களில் Booster pumpகள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே மேற்கண்ட இடங்களில் உள்ள மின் மோட்டார்களை 24 மணி நேரமும் இயக்குவதற்கும் தேவையான தொழில்நுட்ப பணியாளர்களை மாற்று (Shift) முறையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலைவிரப்படி 2020–21 நிதியாண்டின் அடிப்படையில் மார்ச் 2021 முதல் டிசம்பர் 2021 வரை 10 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தவும் அதற்கான செலவினத் தொகை ரூ.37.00

லட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி குடிநீர் சம்மந்தப்பட்ட பணியாக உள்ளதால் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **தனி அலுவலர்அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.**
3. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதியை எதிர் நோக்கி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப் புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**

   **(ந.க.எண்.இ5/1110/2020)**

   **தீர்மான எண்.2460 அனுமதிக்கப்பட்டது.**

**19.** இந்நகராட்சியில் மூன்றாம் குடிநீர் திட்டப்பணிகள் முடிவுற்ற நிலையில் குடிநீர் பணிகளை மேற்கொள்ள போதிய ஆட்கள் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பணியாளர்களை விநியோகம் செய்ய ரூ.48.25 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து தனி அலுவலர் தீர்மான எண். 1719 நாள். 31.10.2016ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 26.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள திருவாளர். Global Environment system, உதகை அவர்களுக்கு 16.12.2019 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்திரவின் படி ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2020 வரை குடிநீர் விநியோக பணியாளர்களை சப்ளை செய்த வகையில் மாதாந்திர பட்டியல் தயார் செய்ததின் படி ரூ.40,20,199/– ஆகும். தற்பொழுது மேற்படி அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டில் சேமிப்பு தொகையாக ரூ.8,04,081/– வரப்பெறுவதினால் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகளை கவனிக்க மதிப்பீட்டின் படி பணியாளர்களை சப்ளை பெற்று அதற்கான தொகை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டில் சேமிப்பு தொகையில் வழங்க அனுமதிக்கும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **அனுமதி வழங்கலாம்.**

   **(ந.க.எண்.இ5/4234/2020)**

   **தீர்மான எண்.2461 அனுமதிக்கப்பட்டது.**

**20.** இந்நகராட்சி அனைத்து பிரிவுகளிலும் அலுவலக பணிகள் தொடர்பாக தட்டச்சு செய்தல் பணியினை ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருடத்திற்கு மேற்கொள்ள தனியார் வெளிக்கொணர்வு நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலர் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனம் / திருவாளர் | ரூபாய். |
|---|---|---|
| 1. | ஸ்டார் கான்ராக்டர், உதகமண்டலம் | 740/– |
| 2. | எஸ்.கே. எண்டர்பிரைசர்ஸ், திண்டுக்கல் (Online Trader) | 749/– |

எனவே, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்.ஸ்டார் கான்ராக்டர், உதகமண்டலம் எனும் தனியார் வெளிக்கொணர்வு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து தனி அலுவலர் முடிவு செய்து அனுமதி வழங்கலாம்.

அலுவலக குறிப்பு :–

1. **தனி அலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.**

   **தீர்மான எண்.2462 அனுமதிக்கப்பட்டது.**

**21.** இந்நகராட்சிக்கு சொந்தான தீட்டுக்கல் உரக்கிடங்கில் எடைமேடை (60 Tonne) அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட எடை மேடைக்கு சாய்வுதளம் (Ramp) மற்றும் மின் வசதிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.42,000/– க்கு பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட தொகையை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**

   **தீர்மான எண்.2463 அனுமதிக்கப்பட்டது.**

22. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட லோயர் பஜார் சாலையில், தேங்காய் படிக்கட்டு நகராட்சி சந்தை கேட் முன்புறம் அமைந்துள்ள பொதுக் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் தற்பொழுது மேற்கண்ட கழிவறைகளை யாரும் ஏலம் கோரவில்லை, இதனால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுகிறது. மேற்கண்ட கழிவறையை நகராட்சிக்கு சந்தையில் உள்ளவர்கள், பொதுமக்கள் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள தரைதளம், கழிவுநீர் குழாய்கள், குடிநீர் குழாய்கள் மற்றும் சுவற்றிக்கு வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.00/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **தீர்மான எண்.2464 அனுமதிக்கப்பட்டது.**

23. இந்நகராட்சிக்குட்பட்ட பொறியியல் பிரிவில் பாதாள சாக்கடை சீரமைப்பு பணியில் 2 – எண்கள் Agitator வாகனம், 1 – எண். Sulage sucker வாகனம், 2 – எண்கள் Desitting வாகனங்கள் உள்ளன. இந்த வாகனங்கள் இயக்க ஓட்டுனர்கள் பற்றாக்குறையாக உள்ளது. இதனால் நகரில் அடிக்கடி ஏற்படும் பாதாள சாக்கடை அடைப்புகளையும். பழுதுகளையும் உடனடியாக சீர் செய்ய இயலாத நிலை உள்ளதால் ஓட்டுனர்கள், துலக்குனர்கள் கடந்த 2 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் பணியாட்களை வினியோகம் செய்யும் முறை நடைமுறையில் உள்ளது.

எனவே எதிர்வரும் மார்ச் – 2021 முதல் பிப்ரவரி – 2022 வரை ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தினமும் 4 – ஓட்டுனர்கள், 3 – துலக்குனர்கள் என மொத்தம் – 7 பேர் வீதம் மொத்தம் 2555 – நாட்கள் பணி தனியார் நிறுவனத்தின் மூலம் பணியாட்களை வினியோகம் செய்யும் வகையில் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.24,90,000/–க்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/1421/2021)**
   **தீர்மான எண்.2465 அனுமதிக்கப்பட்டது.**

24. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழகமெங்கும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பொதுமக்கள் உடல் பரிசோதனை செய்வதற்கு வெகு தூரத்திற்கு செல்ல வேண்டியுள்ளதால் மிகவும் சிரமம் ஏற்படுகிறது என்றும், அதனால் அதிகமான வீடுகள் உள்ள பகுதிகளில் அம்மா மினி கிளினிக் தொடங்கப்பட்டு வருகிறது. எனவே அதன் அடிப்படையில் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பழைய உதகை செல்லும் வழியில் உள்ள ஸ்டோன் ஹவுஸ் பகுதியில் உள்ள மகப்பேறு மருத்துவமனையை அம்மா மினி கிளினிக் ஆக மாற்ற கோரியுள்ளார்கள். மேற்படி கட்டிடத்தில் உள்ள மரத்தினால் ஆன தரையானது மிகவும் பழமை வாய்ந்த தள'மாகவும் இருப்பதால் மேற்படி தளத்தின் உறுதியை அதிகப்படுத்தும் வகையில் புதிய பலகையினை மேற்படி தரை வலுவூட்டும் வகையில் மரத்திலான தரையினை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00/– இலட்சத்திற்கு (பதினைந்து இலட்சம்) பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **மேற்கண்ட பணிக்கான செலவுத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடலாம்**
2. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.தீர்மான எண்.2466 அனுமதிக்கப்பட்டது.**

ஆர்.சரஸ்வதி, பி.எஸ்.சி.,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
உதகமண்டலம் நகராட்சி.